## கலைஞர் எனும் தமிழ்ச் சுரங்கத்தைப் பற்றி

# கவிப்பேரரசு தொகுத்த கவிதைகள் வைரமாகவும், முத்தாகவும் மிளிர்கின்றன!

## கலைஞருக்கு கவிமாலை அணிவித்துள்ள “கலைஞர் 100 கவிதைகள் 100” நூலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,ஆக.9-

**“கலைஞர் எனும் தமிழ்ச்சுரங்கத்தைப் பற்றி கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தொகுத்த கவிதைகள் வைரமாகவும், முத்தாகவும் மிளிர்கின்றன ” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் 100 கவிதைகள் 100 நூலுக்கு அளித்துள்ள வாழ்த்துரையில் கூறியுள்ளார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இலக்கிய அணி சார்பில் 100 கவிஞர்கள் எழுதியுள்ள கவிதை தொகுப்பினை கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்து வழங்கியுள்ள “கலைஞர்- 100 - கவிதைகள் - 100” நூலினை 7.8.2024 அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முகாம் அலுவலகத்தில் வெளியிட, கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பெற்றுக்கொண்டார். தொடர்ந்து மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நூல் அறிமுக விழா நடைபெற்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை வகித்தார். அணி செயலாளர் வி.பி.கலைராஜன் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி. டி.கே.எஸ். இளங்கோவன், துறைமுகம் காஜா, மாவட்டச் செயலாளர்கள் நே. சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர் எ.வ.வேலு, திருச்சி சிவா எம்.பி., கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சி நெறியாளர் தஞ்சை கூத்தரசன், கவிச்சுடர் கவிதைப் பித்தன், மு.தென்னவன், நந்தனம் நம்பிராஜன், ஈரோடு இறைவன், செந்தலை கவுதமன், மா.பா.அன்புதுரை, நந்தனம் கி.மதி, போர் முரசு கதிரவன், மாநில இலக்கிய அணி நிர்வாகிகள், பேரா சேவுகபெருமாள், கே.எஸ்.எம்.நாதன், சி.தசரதன், அ.திராவிட மணி, காரை வெங்கடாசலம், நேருபாண்டியன், ஆடுதுறை உத்திராபதி, மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாட்டினை கழக இலக்கிய அணி பொருளாளர் நா.சந்திரபாபு செய்திருந்தார்.



கலைஞர் நூற்றாண்டில் கவிஞர் நூற்றுவர் தீட்டிய கவிதைகளைத் தொகுத்து அவர் நினைவின் நீட்சிக்குப் படைக்கிறேன். தமிழ் ஆசான் என்று என்னால் என்றென்றும் அழைக்கப்பட்ட ஒரு தலைமகனுக்கு என் ஆற்றலுக்கு உட்பட்ட அன்புக் காணிக்கை இது.

**– வைரமுத்து**

**இந்நிலையில் ‘நூற்றாண்டின் கவிக்குரல்கள் என்ற தலைப்பில் “கலைஞர் 100 கவிதைகள் 100” நூலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கியுள்ள வாழ்த்துரையில் கூறியிருப்பதாவது:**



### நூற்றாண்டின் கவிக்குரல்கள்

கலைஞர் 100 கவிதைகள் 100 என்ற நூலைத் தொகுத்தளித்திருக்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள். புரட்சிக் கவிஞர் தொடங்கி இன்று வரை - அதாவது ஒரு நூற்றாண்டின் கவிஞர்கள் அனைவரது படைப்புகளும் இதில் அடங்கி இருக்கின்றன. நூற்றாண்டின் நாயகராம் கலைஞர் அவர்களை இந்த நூற்றாண்டின் கவிஞர்கள் அனைவரும் பாராட்டிப் போற்றி இருப்பது பெருமைக்குரியதாகும். கலைஞரின் பெருமையும் இதில் வெளிப்படுகிறது. இந்தக் கவிஞர்களின் பெருந்தன்மையும் வெளிப்படுகிறது.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தொகுத்தளித்திருக்கும் கவிதைகள். வைரமாகவும் முத்தாக வும் இருக்கின்றன. ஏனென்றால் இவை அனைத்தும் கலைஞர் எனும் தமிழ்ச் சுரங்க த்தைப் பற்றியவை!

தனி நூலகமாக வைக்கும் அளவுக்கு எழுதிக் குவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். ஆனாலும் அவர் எழுத்தில் முதலில் முளைத்தது கவிதைகள் தான்.

***பதினான்கு வயதில் பைந்தமிழ்க் கொடியைத் தாங்கி.***
***“வாருங்கள் எல்லோரும் இந்திப்***
***போருக்குச் சென்றிடுவோம் – வந்திருக்கும்***
***இந்திப் பேயை விரட்டித் திருப்பிடுவோம்.***
***ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ***
***தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!”***

-என்று போர்ப் பரணி பாடினார் கலைஞர்.

முதலில் எழுதியதே போர்ப் பரணிப் பாட்டுதான். அதனால்தான் கலைஞரது வாழ்க்கையே கலிங்கத்துப் பரணி வாழ்க்கையாக அமைந்திருந்தது.

தனக்கு வாய்த்த தமிழை தமிழர்க்கு வார்ப்பித்தவர் கலைஞர். இலக்கிய வளத்தையும் சொல்லாற்றலையும் கற்பனைத் திறனையும் கவியாற்றலையும் மொழிக்கும் இனத்துக்கும் நாட்டுக்கும் பயன்படுத்தியவர் கலைஞர். அவரால் எழுத்தாளர் ஆனவர். கவிஞர் ஆனவர். கலைத்துறையில் செயல்பட்டவர் இலக்கியத்தில் வலம் வந்தவர் அதிகம்.

அரசியலில் அனைத்து உயரங்களையும் தொட்ட கலைஞர் அவர்கள். இலக்கியத்திலும் அனைத்து உயரங்களையும் தொட்டார். கவியரங்க மேடைகளில் அவர் தலைமை வகித்தாலும் அவையடக்கம் அவரது பண்படக்கமாக இருந்தது.

***“இவர் போலக்***
***கவிதை வளத்தைப் பெற்றேனில்லை***
***கவிதை பாடக் கற்றேனில்லை***
***தளையறுத்த வீரர் கதை பாடுவதால்***
***தளையகற்றிப் பாடுகின்றேன் நானும் – அவர்***
***தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்***
***தொடை தட்டும் என் பாட்டும்!***
***தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்***
***தொடை தட்டும் என் பாட்டும்! என் கவிதை***
***யாப்பின்றிப் போனாலும் போகட்டும் நம் நாடு***
***மொழிமானம் உணர்வெல்லாம்***
***காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை கொண்டோன்!”***


- என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு கனல் தெறிக்கும் கவிதைகளை இந்த தமிழ்ச் சமுதாயத்துக்காகத் தீட்டித் தந்தவர் கலைஞர்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மறைந்தபோது கலைஞர் தீட்டிய கண்ணீர்க் கவிதையை யாரும் மறந்திருக்க முடியாது.

***“இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா – நீ***
***இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்***
***இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா....***
***நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை***
***உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா....”***

- என்ற வரிகளை கலங்கிய குரலில் கேட்டால் இன்றும் கண்ணீர் வரவைக்கும். இரவலாக இதயத்தைக் கேட்டது உலகத்தில் நீங்கள்தான் என்று பாராட்டினார் தமிழ்த் திரையுலக கர்த்தாக்களில் ஒருவரான எஸ்.எஸ். வாசன் அவர்கள். அத்தகைய உலகப் புகழ் பெற்ற கவிஞராம் கலைஞர் குறித்து 100 கவிஞர்கள் எழுதிய 100 கவிதையைக் கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்தளித்திருப்பது கலைஞரின் நூற்றாண்டு விழாவுக்கு மகுடம் வைப்பதாக அமைந்துள்ளது.

மரபுக் கவிஞர்கள். புதுக்கவிஞர்கள் உணர்ச்சிக் கவிஞர்கள். திரைக் கவிஞர்கள், பாடலாசிரியர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் என அனைவரும். இவை அனைத்தையும் உள்ளடக்கிய கலைஞரைக் கவிதையால் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள். ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு விதத்தில் கலைஞரைப் படம் பிடிப்பதாக இருக்கிறது. கவிதைக்குக் கவிதை வரிக்கு வரி சொல்லுக்குச் சொல்




கலைஞர் மிளிர்கிறார். அதன் மூலமாக தமிழுக்கும் ஒரு கவிப்பனுவல் கிடைத்துள்ளது.

***“தலைவர்க்கும் கவிஞர்க்கும் பிற தகைமைசால் மேதைக்கும் தமக்குப் பின் வருகின்ற பரம்பரையே தகுதியாகும்”***

- என்று எழுதினார் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞருக்குப் பின் வந்த தகுதிசால் கவிஞர்கள் பலரும் இதில் இடம்பெற்றிருப்பது கலைஞர்க்குக் கிடைத்த சிறப்பே ஆகும்.

**கலைஞர் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே இப்படி ஒரு நூல் வெளியாகவில்லையே என்பதில் எனக்கு வருத்தம்தான். நிறைவுற்ற பிறகும் கலைஞரைப் போற்ற கவிப்படை திரண்டு இருப்பதும் பெருமை தான்!**

கலைஞருக்குக் கவி மாலை அணிவித்து வந்த கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் கவிஞர்களின் மாலையைத் தொகுத்தளித்திருப்பதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துரையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் ஊராட்சியில், ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடப் பணியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (08.08.2024) அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். சர்வீஸ் என்று இருப்பது போல் மருத்துவத் துறைக்கும்

# இந்தியன் மெடிக்கல் சர்வீசை உருவாக்க வேண்டும்!

## மக்களவையில் - டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக.10-

“ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். சர்வீஸ் என்று இருப்பதுபோல் மருத்துவத்துறைக்கும் இந்தியன் மெடிக்கல் சர்வீஸ் என்று ஒரு பிரிவை உருவாக்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மக்களவையில் பேசியதாவது:-

நமது நாட்டில் ஒன்றிய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஆர்.எஸ்.ஐ., இரயில்வே சர்வீஸ் என இருபதுக்கும் மேற்பட்ட துறைகளுக்கு அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதுபோல மக்களுக்கு மிக முக்கிய துறையாக உள்ள மருத்துவத்துறைக்கு என்று இந்தியன் மெடிக்கல் சர்வீஸ் என்று ஒரு பிரிவை உருவாக்கி எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ். போன்ற மருத்துவக் கல்வி பயின்றவர்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவத் துறை அதிகாரிகளாக நியமனம் செய்ய வேண்டுமென்று பல ஆண்டுகளாக மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் கோரி வருகின்றனர்.

மருத்துவம் தவிர்த்து வேறு கல்வி பயின்ற அதிகாரிகளை மருத்துவத்துறை அதிகாரிகளாக நியமிக்கும்போது அவர்களுக்கு மருத்துவம் சம்பந்தப்பட்ட விவரங்கள் குறித்த புரிதல் இல்லை. எனவே அவர்கள் மேற்கத்திய நாடுகள் பின்பற்றுகின்ற மருத்துவ அளவீடுகளையே உதாரணத்திற்கு



சர்க்கரை வியாதி முதலானவற்றுக்கே மேற்கத்திய நாடுகளின் அளவீடுகளையே பின்பற்றுகின்றனர்.

குளிர் தேசங்களான மேற்கத்திய நாடுகள் வைட்டமின் டி குறித்து வைத்துள்ள அளவீடுகளையே வெப்ப நாடான நம் நாட்டிற்கும் பின்பற்றுகின்றனர். மருத்துவத்துறைக்கு சேதவிகிதம் நிதி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டபோதிலும் கூட இத்துறைக்கு பட்ஜெட்டில் 2 சதவீத அளவிற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

இது போன்ற பிரச்சினைகளை புரிந்துகொள்ள வேண்டிய நிலையில் அதிகாரிகள் இருந்தால்தான் இக்குறைகள் நிவர்த்தி செய்யப்படும். எனவே, இந்திய மருத்துவத்துறை என்று ஒரு பிரிவை உருவாக்கி மருத்துவக் கல்வி பயின்றவர்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவத்துறைக்கு அதிகாரிகளாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. பேசினார்.